# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் ஜெர்மனியிலுள்ள பைத்துஸ் ஸபுஹ் பள்ளிவாயிலில் 14.12.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுா் அவர்கள் கூறினார்கள்:**

பொதுவாக சஹீது என்பதற்கு இறைவனின் வழியில் அர்ப்பணம் ஆனவர் என்று பொருள் கொடுக்கப்படுகிறது. இறைவனின் வழியில் தன் உயிரை அர்ப்பணிப்பவர் சஹீது என்ற பதவியைப் பெறுகிறார் என்பதில் ஐயமில்லை. அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தன் வாசல்களைத் திறக்கிறான். ஆனால் சஹீது என்பது மிகப் பரந்த பொருள் கொண்டதாகும். இந்த சொல் மிகவும் பரந்த அர்த்தத்தை உள்ளடக்கியதாகும். இதற்கு இன்னும் பல அர்த்தங்கள் உள்ளன. எனவே, இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்கள் மற்றும் ஹதீஸ்களின் ஒளியில் இது தொடர்பாக சிலவற்றைக் கூறுவேன்.

இந்த நாடுகளில் வளர்ந்து வருகின்ற குழந்தைகள், இளைஞர்கள் இந்த கேள்வியைக் கேட்கின்றனர். கடந்த நாட்களில் ஹம்பெர்க்கில் வக்ஃபே நவ் மாணவியருக்கான வகுப்பு நடந்தது. அங்கு ஒரு சிறுமி என்னிடம் கேட்டாள். அதாவது நீங்கள் சஹீதுகளின் சம்பவங்களை எடுத்துக் கூறுகின்றீர்கள். அதில் பெரும்பான்மையினர் நான் சஹீதாவதற்கு துஆ செய்யுங்கள் என்று அவர்களது உறவினர்களிடம் கூறியதாகக் கூறினீர்கள். அல்லது சஹீது பதவியை அடைய துஆ செய்யுங்கள் என்றோ அல்லது சஹாதத் அதிர்ஷ்டம் செய்தவர்களுக்குத்தான் கிடைக்கும் என்றோ கூறியதாக கூறினீர்கள். சஹீது ஆவதற்கு துஆ செய்வதற்குப் பதிலாக எதிரிகளை வெற்றி கொள்வதற்காக ஏன் துஆ செய்யுமாறு கூறவில்லை. அவர்கள் ஏன் அதற்காக துஆ செய்வதில்லை? என்ற கேள்வி எழுகிறது.

நிச்சயமாக எதிரிகளின் மீது வெற்றி கொள்வதற்காக செய்யும் துஆவே முதன்மையானதாகும். இறைவனது ஜமாஅத்திற்கு வெற்றி கிடைக்கும் என்பது இறைவனின் வாக்குறுதியாகும். வெற்றிகள் இவர்களுக்கே உரியதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் வெற்றிக்கான முன்னறிவிப்பை வழங்கி இருந்தான். மேன்மையும் வெற்றியும் கிடைக்கும் என்று நற்செய்தி வழங்கியிருந்தான். இதற்கான வெளிப்படையான பிரகாசமான அடையாளங்களை ஜமாஅத்தே அஹ்மதிய்யா பார்க்கும் என்பது நமது நம்பிக்கையாகும். அல்லாஹ்வின் அருளால் இதற்கான அறிகுறிகளை நாம் பார்த்து வருகிறோம். ஒவ்வொரு வருடமும் எல்லா எதிர்ப்புக்கு மத்தியிலும் இலட்சக்கணக்கில் மக்கள் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர். எதிர்ப்பு உச்சத்தில் உள்ள நாடுகளிலும் பைஅத்துகள் நடக்கின்றன. இவ்வனைத்தும், வளர்ச்சியும் வெற்றியும் ஆகும். இதன் காட்சிகளை நாம் பார்த்து வருகிறோம்.

இவ்வாறே ஜமாஅத் இன்னும் பல நிகழ்ச்சிகளை நடத்தி இஸ்லாத்தின் அழகிய வடிவத்தை எடுத்துக்காட்டி இஸ்லாம் அல்லாத உலகின் சந்தேகங்களையும் யூகங்களையும் போக்கி விடுகிறது. இவை ஜமாஅத்தே அஹ்மதிய்யா எடுத்து வைக்கும் முன்னேற்ற அடிகளாகும். இன்சா அல்லாஹ் ஒரு நேரம் வரும் போது இவை உலகில் அசாதாரணமான புரட்சியை ஏற்படுத்தும். இதற்காக ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சியும் செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும்.

எவ்வாறிருப்பினும், பெரிய குறிக்கோள்களை அடைவதற்கு தியாகங்களும் செய்ய வேண்டியது வரும். உயிர் தியாகமும் செய்ய வேண்டியது வருகிறது. ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் உறுப்பினர்கள் தேவைப்படும் போதெல்லாம் எல்லா வகையான தியாகங்களும் செய்து வருகின்றனர். இதற்காக ஆயத்தமாகவே உள்ளனர். இதில் உயிர் தியாகமும் அடங்கும். இந்த தியாகம் உயிரை அர்ப்பணிப்பவர்களுக்கு சஹாதத்தின் உயர் பதவியை பெற்றுத் தருகிறது. இம்மக்கள் அல்லாஹ்வின் விருப்பத்தின் சொர்க்கத்தில் நுழைகின்றனர்.

ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று சஹாதத் என்பது இது மட்டுமல்ல. சஹீது என்பதற்கு இது மட்டும் பொருளாகாது. இதன் ஆழத்தைக் கேள்வி கேட்கும் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதனால் சஹாதத்தின் உயர் பதவியைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். இந்த துஆவின் ரூஹை புரிந்து கொள்ள வேண்டும். இதனால் இறைவனின் விருப்பத்தின் சொர்க்கத்தில் நுழைய வேண்டும்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூஹுரைராவிடம் கூறினார்கள். அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்கள் மட்டும் சஹீது என்று அழைக்கப்படுவார்கள் என்றால், எனது உம்மத்தில் மிகவும் குறைவான சஹீதுகள் தான் இருப்பார்கள்.

முஸ்லிமின் ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒருவர் உண்மையான நிய்யத்தோடு சஹாதத்தை விரும்பினால் அல்லாஹ் அவரை ஷுஹதாக்களுடன் சேர்த்து விடுவான். அவரது வஃபாத் படுக்கையில் நிகழ்ந்தாலும் சரியே. பத்ர் போரின் போது நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் வாக்குறுதியை எடுத்துக்கூறி வெற்றிக்காக துஆ செய்தார்கள். அவர்களோடு பத்ர் போரில் கலந்து கொண்ட அந்த முஸ்லிம்களின் வாழ்க்கையை அல்லாஹ்விடம் வேண்டினார்கள். உயிரை அர்ப்பணித்து சஹாதத்தைப் பெற வேண்டும் என்று துஆ செய்யவில்லை. இந்த முஸ்லிம்கள் அழிந்து விட்டால் பூமியில் உன்னை வணங்குபவர் யாரும் இருக்கமாட்டார் என்று வேண்டினார்கள். இறைவனை வணங்குவதே மனிதப் படைப்பின் நோக்கம் என இறைவன் கூறியுள்ளான். எனவே ஒரு உண்மையான மூஃமின் ஒரு முறை மட்டும் வாழ்க்கையை அர்ப்பணிப்பது பிறப்பின் நோக்கம் அல்ல. மாறாக, தொடர்ச்சியாக அல்லாஹ்வின் விருப்பத்தின் பாதையை அடைவதற்காக முயற்சி செய்வதும் எல்லா வகையான தியாகத்திற்கும் எப்போதும் தயாராக இருப்பதுமே நோக்கமாகும்.

ஒரு மூஃமின் போரை விரும்பக் கூடாது என்றும் ஹதீஸில் வந்துள்ளது. ஆனால் வலுக்கட்டாயமாக போருக்கு இழுக்கப்பட்டால் மார்க்கத்திற்கு எதிராக ஒரு மூஃமினின் உயிரைப் பறிக்க முயற்சி செய்தால் அவர் பயந்து பின்வாங்கக் கூடாது. மாறாக, ஆண்மையுடன் தனது உயிரைக் காணிக்கையாக்க வேண்டும். அதிலிருந்து பின்வாங்கக் கூடாது. எப்போது போருக்கான அனுமதியும், சூழ்நிலையும் இருந்ததோ அப்போது எதிரியை எதிர்த்து அல்லது தனது உயிரை அர்ப்பணித்து ஒரு மூஃமின் சஹாதத்தின் உயர் பதவியைப் பெற்றார்; அல்லது வெற்றியைப் பெற்றார். இதில் எவ்விதமான அச்சமோ அல்லது பயமோ இருந்ததில்லை.

இன்றைய சூழ்நிலையில் போர் கிடையாது. ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் கோழை எதிரிகள் மறைந்து கொண்டு தாக்குகின்றனர். ஆனால் முன்னால் வந்து தாக்கினாலும் கூட போர் புரிவதற்கு கட்டளை கிடையாது. சில அஹ்மதிகளுக்கு மிரட்டல் கடிதங்கள் கூட வருகின்றன. அஹ்மதிய்யத்தை விட்டு விடு. அல்லது மரணிக்கத் தயாராக இரு என்று மிரட்டல்கள் வருகின்றன. இவ்வாறான நிலைகளில் ஒரு மூஃமினின் ஆண்மை இதுதான். பாகிஸ்தானின் அஹ்மதிகள் இதை வெளிப்படுத்துகின்றனர். அதாவது உயிர் போனால் போகட்டும். ஆனால் மார்க்கத்தையும், இறைவனின் விருப்பத்தையும் தியாகம் செய்ய முடியாது.

ஆகவே இது ஒரு மூஃமினின் தனித்துவமாகும். இது பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு தரங்களில் நிலை நாட்டப்படுகிறது. ஆனால் நான் முன்னதாக கூறியது போன்று சஹாதத்தின் பரந்த பொருள் என்ன? அல்லாஹ் நபிமார்கள், ஸித்தீக்குகள், சஹீதுகள் மற்றும் ஸாலிஹீன்களுடன் இணைவதற்கு மூஃமின்களுக்கு துஆவும் கற்றுத் தந்துள்ளான். இதற்கு என்ன பொருள்? இதன் தத்துவம் என்ன? இதன் ஆழம் என்ன? இவை எல்லாவற்றையும் புரிந்து கொள்வதற்கு அல்லாஹ் நம்மீது கருணை காட்டியவாறு காலத்தின் இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை நல்கியுள்ளான். அவர்கள் இது தொடர்பாக நமக்கு மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறி நமக்குப் புரிய வைத்துள்ளார்கள்.

இப்போது நான் நபி, ஸித்தீக், சஹீது மற்றும் ஸாலிஹீன் ஆகியவற்றைக் கூறினேன். இதன் அனைத்து சிறப்பம்சங்களையும் விளக்கமாட்டேன். நான் ஏற்கனவே கூறியது போன்று, சஹீது பற்றி கேள்வி எழுகிறது. இது

தொடர்பாக அவர்களின் விளக்கவுரைகள் மற்றும் மேற்கோள்களின் ஒளியில் நான் எடுத்துக் கூறுவேன். ஏனெனில் சஹீதுகளைப் பற்றி நாம் பேசி வருகிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சஹீதின் உண்மைத்துவம் மற்றும் மேன்மை ஆகியவற்றைக் குறித்து எண்ணற்ற இடங்களில் எழுதியுள்ளார்கள். அதன் மேற்கோள்களை நான் எடுத்துக் கூறுவேன். சஹீது ஆவதற்காக துஆ செய்வது, ஏன் அவசியமாகும்? எவ்வகையான சஹீது ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும்? ஒரு உண்மையான மூஃமின் ஏன் இதை விரும்ப வேண்டும்? என்பன போன்றவைகளை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சஹீது என்பதன் பொருள், போரில் கொலை செய்யப்பட்டோ அல்லது ஆற்றில் மூழ்கியோ அல்லது நோயால் இறந்தவரோ சஹீதாவார் என்று பொதுமக்கள் நினைக்கின்றனர். ஆனால் நான் கூறுகிறேன். இந்த வகையில் மட்டும் திருப்தி கொள்வது, இந்த அளவு மட்டும் இதை எல்லைக்குட்படுத்துவது மூஃமினின் கண்ணியத்திற்கு குறைவாகும். இறைவனிடமிருந்து உறுதிப்பாடு மற்றும் நிம்மதியின் சக்தியைப் பெறுபவர் தான் உண்மையில் சஹீதாவார். எந்தவொரு பூகம்பமோ அல்லது சம்பவமோ அவரை அசைக்க முடியாது. கஷ்டம், துன்பம் ஆகியவற்றில் தைரியத்துடன் இருக்கிறார். எந்த அளவுக்கு என்றால், இறைவனுக்காக உயிரையும் அர்ப்பணிக்க வேண்டியது வந்தால், அசாதாரணமான முறையில் அவருக்கு உறுதிப்பாடு கிடைக்கிறது. எவ்வித கவலையும் ஏக்கமுமின்றி தனது தலையை முன் வைத்து விடுகிறார்.

கூறுகின்றார்கள்: மீண்டும் மீண்டும் தனக்கு வாழ்க்கை கிடைக்க வேண்டும். மீண்டும் மீண்டும் அதை அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர்களின் ஆன்மாவில் ஒரு இன்பமும் ஆனந்தமும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்களின் உடலில் விழும் ஒவ்வொரு வாளும், அவர்களை அறைந்து விடும் ஒவ்வொரு அடியும் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையையும் ஒரு புதிய மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் வழங்குகிறது. இதுவே சஹீதின் பொருளாகும்.

கூறுகின்றார்கள்: இந்த சொல் சஹத் என்ற மூலச் சொல்லிலிருந்து வந்ததாகும். கடினமான இறை வணக்கத்தை மேற்கொள்பவர்கள், இறைவழியில் ஒவ்வொரு கசப்பையும் துன்பத்தையும் பொறுத்துக் கொள்கிறார்கள்; அல்லது பொறுத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கின்றனர். அவர்கள் தேனைப் போன்று இனிப்பையும் சுவையையும் பெறுகின்றனர். தேன் ஃபீஹி ஷிஃபா உல் லின்னாஸ் என்பதை உண்மைப்படுத்துவதைப் போல் இம்மக்களும் ஒரு விச முறிவு மருந்து போன்றோர் ஆவர். இவர்களின் தோழமையில் இருப்பவர்கள் பல்வேறு நோய்களிலிருந்து நிவாரணம் பெறுகின்றனர். மரணிப்பதால் மட்டுமே சஹாதத் கிடைக்க முடியும் என்றால், பிறகு அவர்களின் நெருக்கத்திலிருந்து மனிதன் எவ்வாறு பலன்பெற முடியும்? உண்மையான நன்மைகள், அல்லாஹ்வின் விருப்பத்தின்படி செயல்படுதல், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுதல் ஆகியவையும் சஹீதின் ஒரு பதவியாகும். இவர்களின் நெருக்கத்தில் வாழ்பவர்களைப் பற்றி, ‘அவர்கள் பல்வேறு நோய்களிலிருந்து நிவாரணம் பெறுகின்றனர்’ என்று கூறுகின்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹீது என்பது மனிதன் தனது ஒவ்வொரு செயலிலும் அல்லாஹ்வை பார்க்கிறான் அல்லது குறைந்தபட்சம் இறைவனை, தான் நேரில் பார்ப்பது போல் நம்புகிறார். இதற்குப் பெயர் இஹ்ஸான் ஆகும். இந்த நிலைக்குப் பெயரும் சஹீது தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: சஹீது என்பது மனிதன் தனது ஒவ்வொரு செயலிலும் இறைவனைப் பார்க்கிறார் அல்லது குறைந்தபட்சம் இறைவனை நேரில் பார்ப்பது போல் நம்புகிறார். அதாவது அவர் எந்த வேலையைச் செய்தாலும் அல்லாஹ் எனது இந்த வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நிலை இருக்கும் என்றால் பிறகு எப்போதும் நல்ல செயல்களின் பக்கம் தான் கவனம் இருக்கும்; மனிதன் தீய காரியத்தைச் செய்ய முடியாது. அல்லாஹ்வைப் பொருத்தவரையில் இந்த நிலை ஏற்பட்டால் அது இஹ்ஸான் ஆகும் என்று கூறினார்கள்.

இஹ்ஸான் என்றால் என்ன? இதை விளக்கியவாறு அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ‘இறைவனுடனும் அவனது படைப்பினத்துடனும் நீங்கள் எப்போதும் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். அதாவது இஹ்ஸான் என்ற நிலைக்கு முன்னுள்ள நிலைக்கு அத்ல் – நீதி என்று பெயர்.’

பிறகு கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் கடமைகளையும், படைப்பினங்களின் கடமைகளையும் நிறைவேற்றுங்கள். இதற்கு மேலும் செய்ய முடியும் என்றால், அத்ல் மட்டுமல்ல. இஹ்ஸான் செய்யுங்கள். அதாவது கடமைகளை விடவும் அதிகமாக தூய மனப்பான்மையுடன் படைப்பினங்களுடன் இறைவனைப் பார்ப்பது போன்று அவனை வணங்குங்கள். கடமையான இறைவணக்கங்களை செய்தாக வேண்டும். ஆனால் அதை விட அதிகமாக நஃபில்களான இறை வணக்கங்களையும் செய்ய வேண்டும். அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை செலுத்த வேண்டும். அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இதை செய்தால் அதுதான் உண்மையில் இறைவனுக்கு அடிபணிதலாகும். இதுவே இஹ்ஸான் ஆகும். இது சஹாதத்தின் உயர் பதவிக்கு மனிதனை இட்டுச் செல்லும்.

உரிமைகளை விட மக்களிடம் அதிகமான அன்புடன் நடந்து கொள்ளுங்கள். மக்களின் உரிமைகளைக் கொடுப்பது மட்டும் நமது பணியல்ல. மாறாக இதன் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவதற்கும், சஹீதின் உயர் பதவியை அடைவதற்கும் உரிமையை வழங்குவதோடு அன்பு, நேசம், மென்மை மற்றும் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் யாருமில்லை. அவனைத் தவிர அன்பிற்குரியவர் யாருமில்லை. அவனைத் தவிர நம்பிக்கை வைப்பதற்கு யாரும் தகுதியானவர் இல்லை. ஏனெனில் அவன் படைப்பாளன் ஆவான். இந்த வாழ்க்கையையும் இந்த அருட்கொடைகளையும் நிலைத்திருக்கும்படி செய்பவன் ஆவான். அவனே ரப் ஆவான். அவன் வளர்ப்பவன் ஆவான். அவன் தனது அருட்கொடைகளை வழங்குகின்றான்.

கூறுகின்றார்கள்: இவ்வனைத்தின் மீதும் நம்பிக்கை கொள்வது மட்டும் ஒரு மூஃமினுக்கு போதுமானதல்ல. அல்லது அல்லாஹ் மட்டுமே சக்திகள் உடையவன். அவனே எஜமானன் என்று நம்புவது மட்டும் போதாது. மாறாக அதில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். இதில் காலடியை முன்னால் எடுத்து வைக்க வேண்டும். அந்த முன்னேற்றம் இதுவாகும். அதாவது அல்லாஹ்வின் மகத்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு முன்னால் உங்கள் இறைவணக்கங்களில் மரியாதையை உருவாக்குங்கள். அல்லாஹ்வின் முன்னால் உள விருப்பத்துடன் குனிபவர்களாக இருக்க வேண்டும். இந்த நிலைமை உருவாக வேண்டும்.

பிறகு கூறுகின்றார்கள்: அவனது அன்பில் உங்களையே மாய்த்துக் கொள்ளுங்கள். அவனது மகத்துவம், கம்பீரம் மற்றும் என்றென்றும் குறையாத அழகை நேரில் கண்டது போல் அவனது அன்பில் உங்களை அர்ப்பணமாக்கி விடுங்கள்.

எனவே மனிதன் அல்லாஹ்வின் எல்லையில்லாத மற்றும் முடிவில்லாத அழகைப் பார்க்கும் போது அவனது பண்புகளின் மீது நம்பிக்கை கொள்கிறான். இதனால் இறைவணக்கத்தின் பால் கவனம் ஏற்படுகிறது. பிறகு இறைவனின் விருப்பத்திற்கு மாற்றமான எந்தவொரு செயலையும் செய்யமாட்டான். இந்த நிலை ஏற்பட்டால் இதுவே சஹீதின் உயர் பதவியாகும்.

இங்கு சஹீதிற்கு விளக்கம் தந்துள்ளார்கள். அதாவது அல்லாஹ்வுடன் இந்த தொடர்பு ஏற்படும் போது நிலைத்து நிற்பதற்கு சக்தி பிறக்கிறது. பிறகு மனிதன் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கு எல்லா தியாகமும் செய்யத் தயாராகி விடுகிறான். இவ்வனைத்தும் ஏதாவது நிர்பந்தத்தின் காரணமாக இருப்பதில்லை. மாறாக, அந்த வழியில் உள்ள கடினங்களிலும் நிம்மதி கிடைக்கிறது. அதுவும் நிம்மதிக்குக் காரணமாக அமைகிறது. ஒவ்வொரு கஷ்டத்திற்கு முன்னாலும் நெஞ்சை நிமிர்த்தியவாறு மூஃமின் நிற்கிறார். எந்தவொரு அச்சமோ, கவலையோ, ஏக்கமோ உள்ளத்தில் இருப்பதில்லை. நான் இந்தக் காரியத்தைச் செய்யாமல் இருந்திருந்தால், நான் அஹ்மதிய்யத்தின் இன்ன எதிரி கூறுவதைக் கேட்டிருக்கலாம். அவர்களின் மிரட்டல்களுக்காக

அஹ்மதிய்யத்தை விட்டு விலகி இருந்தால் இப்போது நான் சந்தித்து வருகின்ற கஷ்டங்களிலிருந்து தப்பித்திருப்பேன். உண்மையான முறையில் ஈமான் கொள்கின்றார் என்றால் ஒரு மூஃமின் ஒருபோதும் இவ்வாறு நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. ஈமானில் உறுதிப்பாடும் அல்லாஹ்வின் மீது உறுதியும் இந்தத் துன்பங்களிலிலும் கூட அவர்களுக்கு நிம்மதியும், அமைதியும், மகிழ்ச்சியும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

ஆக இதுவே சஹீதின் உயர் பதவியாகும். பிறகு அவர்கள் கூறினார்கள்:

கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு இறைவனை மனிதன் வணங்க வேண்டும். உலகத்தின் ஒவ்வொரு சுகத்தையும் இறைவிருப்பம் மற்றும் அவனை வணங்குவதற்காக தியாகம் செய்யும் போதுதான் சஹாதத் கிடைக்கிறது. தியாகம் செய்வதால் மட்டுமல்ல. அவருக்கு அல்லாஹ்வின் புறமிருந்து அவருக்கு நிம்மதியும் இன்பமும் தேனின் சுவையைப் போன்று அவருக்கு கிடைக்கிறது. ஒரு மூஃமினின் இறைவணக்கம் தொழுகைகளின்பால் கவனம் ஆகியவை ஏதேனும் நிர்பந்தத்தால் அல்லாமல் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையின் விளைவாக இருக்க வேண்டும். இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதற்காக இருக்க வேண்டும். இறைவனுக்காக செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்குக் காரணமாக அமைகிறது. இந்த விருப்பம் சஹாதத்திற்கான உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுத் தருகிறது.

இவ்வாறே மனிதன் கைவிடுகின்ற ஒவ்வொரு தீமைகளையும் இறைவன் தடுத்துள்ளான் என்பதற்காக விடுகிறார். நான் இறைவனின் விருப்பத்தைப் பெற வேண்டும். அல்லாஹ்வுடன் எனது தொடர்பை உறுதிப்படுத்த வேண்டும். இறைவன் நல்ல மற்றும் தீய செயல்கள் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். எனது இந்த தீய பழக்கம் அல்லது தீய செயல் இறைவனின் கோபத்திற்குக் காரணமாக அமைந்து விடலாம். எனவே இது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுபவரை தீமைகளிலிருந்து தடுப்பது மட்டுமின்றி நன்மைகளின் பக்கமும் கவனமூட்டும். இறைவனின் மீது ஈமானிலும் உறுதிப்பாட்டிலும் வலிமை ஏற்படும். இதுவே ஒரு மனிதனின் இவ்வுலக வாழ்வின் நோக்கமாகும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்.

பொதுவான மக்கள் சஹீதுக்கு இவ்வாறு தான் அர்த்தம் கொடுக்கின்றனர். அதாவது அம்பு அல்லது துப்பாக்கியால் கொல்லப்படுபவர் அல்லது வேறு ஏதேனும் முறையில் எதிர்பாராமல் இறந்தவர் தான் சஹீது என்று கருதுகின்றனர்.

இங்கு ஒரு ஹதீஸை நான் எடுத்துக் கூறுகிறேன். **ஹஸரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** ஒரு ஹதீஸில் வருகிறது.

சஹீது ஐந்து வகைப்படுவர். நோயினால் இறப்பவர், வயிற்று நோயால் இறப்பவர், தண்ணீரில் மூழ்கி இறப்பவர், கட்டிடத்தின் கீழ் அமுங்கி இறப்பவர் மற்றும் அல்லாஹ்வின் வழியில் உயிரை அர்ப்பணித்தவர் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

அல்லாஹ்வின் பார்வையில் சஹாதத்திற்கு இந்த ஒரு நிலை மட்டுமல்ல. அதாவது இது வெளிப்படையான மரணம் மூலமாக கிடைக்கும் சஹாதத் ஆகும். ஆனால் சஹாதத்திற்கு இன்னும் பல படித்தரங்கள் உள்ளன. அல்லாஹ்வின் பார்வையில் இவற்றை ஒவ்வொரு மூஃமினும் தேட வேண்டும். அவர்கள் கூறினார்கள்: என்னைப் பொருத்தவரையில் உடல் வெட்டப்பட்டு சஹீது ஆவது தவிர வேறு சஹாதத்தும் உண்டு. அது ஒரு நிலையாகும். அது உள்ளத்துடன் தொடர்புடையதாகும். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! ஸித்தீக், நபியுடன் ஒரு நெருக்கம் கொண்டுள்ளார்.

தொடக்கத்தில் நான் கூறினேன். அல்லாஹ் துஆ செய்யுமாறு கூறியுள்ளான். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுக்கு கட்டுப்படக்கூடியவர்கள் நபி, ஸித்தீக், சஹீது அல்லது ஸாலிஹீன்களாக உள்ளனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! ஸித்தீக், நபியுடன் நெருங்கி இருப்பவராவார். அவர் நபிக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளார். சஹீது, ஸித்தீகின் அடுத்தபடியாக நெருக்கம் உடையவராவார். நபியிடம் எல்லா பண்புகளும் முழுமையாக காணப்படுகின்றன. அதாவது அவர் ஸித்தீக் ஆகவும், சஹீதாகவும், ஸாலிஹ் ஆகவும் இருக்கிறார். ஆனால் ஸித்தீக் மற்றும் சஹீது என்பது ஒரு தனித்தனியான பதவியாகும். ஸித்தீக் சஹீதாவாரா என்ற விவாதம் தேவையற்றதாகும். முழுமையின் ஒரு நிலையில் ஒவ்வொரு செயலும் அற்புதமாக கருதப்படுகிறது. இவ்விரண்டு நிலைகளும் தமது பதவியின் அடிப்படையில் வெவ்வேறாகும். எனவே அல்லாஹ் அவருக்கு சக்தியை வழங்குகிறான். சிறந்த செயல்களும் சிறந்த நல்லொழுக்கங்களும் முழுமையான முறையில் அவரிடமிருந்து வெளிப்படுகின்றன. வெளி வேசமின்றி வெளிப்படுகின்றன. அந்த நற்செயல்கள் செய்வதற்கு எந்த அச்சமும், பேராசையும் காரணமாக இருப்பதில்லை. மாறாக அவை அவரது இயல்பின் ஒரு அங்கமாக மாறி விடுகிறது. அவருடைய இயல்பில் வெளிவேசம் இருப்பதில்லை.

உதாரணமாக ஒருவரிடம் ஒரு யாசிப்பவர் மக்கள் மத்தியில் வந்து யாசிக்கும் போது, அவரிடம் ஏதாவது இருந்தாலும் இல்லாவிட்டாலும் கொடுக்க வேண்டியது வருகிறது. தான் ஒரு பணக்காரர் என்றால் அல்லது பணக்காரராக இல்லாவிட்டாலும் வெட்கத்திற்காக ஏதாவது கொடுக்க வேண்டியது வருகிறது.

கூறுகின்றார்கள்: இறையச்சத்தால் இல்லாவிட்டாலும், மக்களுக்காகவாவது, இவருக்கு வசதி வாய்ப்பு இருக்கிறது; இருந்தும் இவர் யாசிப்பவருக்கு கொடுப்பதில்லை என்று மக்கள் நினைப்பார்களே! என்பதற்காக கொடுக்கிறார். ஆனால் இந்த வெளிவேசம் சஹீதிடம் இருப்பதில்லை. அவரது சக்தியும் திறனும் வளர்ந்து கொண்டே செல்கிறது. எந்த அளவுக்கு வளர்கிறதோ அந்த அளவுக்கு அவரது துன்பம் குறைந்து கொண்டே செல்கிறது. அவர் சுமையை உணர்வதில்லை. இறைவனுக்காக எல்லா விதமான கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்வதற்கு அவர் தயாராகி விடுகிறார். எவ்வித வெளிவேசமும் இல்லாமல் அவர் தயாராகி விடுகிறார். எவ்விதமான அச்சத்தின் காரணமாகவோ அல்லது வெகுமதிக்காகவோ அவர் இதை செய்வதில்லை.

கூறுகின்றார்கள்: யானையின் தலையில் ஒரு எறும்பு இருந்தால் அது என்ன சுமையை உணரும்? இவ்வாறு தான் சஹாதத் பதவியை அடைய விரும்பும் மூஃமினுக்கு ஏற்படும் துன்பங்கள் அவருக்கு சுமையாக இருப்பதில்லை.

இங்கு மேலும் கூறுகின்றார்கள்: உண்மையான சஹாதத் என்பது உள்ளத்தின் நிலைக்குப் பெயராகும். உள்ளத்தின் நிலை இறைவன் மீது முழுமையான நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டில் பிறக்கிறது. அதாவது இந்த நம்பிகை நான் ஏற்கனவே கூறியது போன்று, எனது ஒவ்வொரு செயலையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஒவ்வொரு செயலையும் நான் இறைவனுக்காக செய்ய வேண்டும் என்ற சிந்தனை உடைய மனிதரிடமிருந்து உயர்ந்த நல்லொழுக்கமும் மற்றும் நற்செயல்கள் ஆகியவை அதன் அசல் வடிவத்தில் வெளிப்படுகின்றன. அதாவது அவர்கள் அதை செய்வது உலகிற்கு காட்டுவதற்காக அல்ல. மாறாக, இறைவனின் விருப்பமே காரணமாகும். அல்லாஹ்வின் விருப்பத்தையும் வெறும் முயற்சியால் மட்டும் பெற்று விட முடியாது. மாறாக ஒரு உண்மையான மூஃமினின் இயல்பில் அவர் அதற்காக தொடர்ச்சியாக முயற்சி செய்யும் போது அது ஓர் அங்கமாக மாறி விடுகிறது.

பிறகு இறைவனின் விருப்பத்தைப் பெறுவதைத் தவிர வேறு எந்த சிந்தனையும் அவருக்கு இருப்பதில்லை. உதாரணமாக, ஒருவருக்கு ஜமாஅத்திற்குத் தொண்டு செய்ய வாய்ப்பு கிடைத்தால் அதை சிறந்த முறையில் செய்கிறார் என்றால், என்னைப் புகழ வேண்டும் என்பதற்காக செய்வதில்லை. மாறாக, இறைவனின் விருப்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்கிறார். எனவே இந்தத் தொண்டு இயல்பில் ஒன்றாகி விட்டது. இது இல்லாமல் நிம்மதியில்லை. சிலரிடம் வேலை வாங்கவில்லை என்றால் அவர்கள் நிம்மதி இழந்து விடுகின்றனர்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு உதாரணம் கூறியுள்ளார்கள்: ஒரு யாசிப்பவர் ஒருவரிடம் சென்று ஏதாவது யாசித்தால் உலகவாதிகள் பெரும்பாலும் ஏதேனும் கொடுத்து விடுகின்றனர். ஆனால் அதில் பெரும்பாலும் வெளிவேசம் இருக்கும். ஆனால் சஹீது இப்படிப்பட்ட நிலையில் இருப்பதில்லை. சஹீதுடைய நல்ல இயல்பு அவரை நன்மையைச் செய்யத் தூண்டுவதால் அவர் நன்மை செய்கிறார். இயல்பாக நன்மை செய்வதன் தரம் நேரம் செல்லச் செல்ல அத்துடன் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஒரு நன்மையைச் செய்தால் அல்லது ஒரு சேவை செய்த பின் நான் மிகப்பெரிய காரியத்தை சாதித்து விட்டேன். எனக்கு இதற்கான கூலி அல்லது பாராட்டு உலகவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டும். ஜமாஅத்தின் ஒரு தொண்டு செய்தால் பொறுப்பாளர்கள் அதற்கான கூலியைத் தர வேண்டும் என்பதல்ல. மாறாக இறைவனின் விருப்பத்தை மட்டும் பெறுவதற்காகவே இந்தப் பணிகள் நடைபெறும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தர்யாக்குல் குலூப் என்ற தமது நூலில் கூறுகிறார்கள்:**

சஹாதத் பதவி என்றால் மனிதன் தனது ஈமானின் சக்தியால் இறைவன் மீதும் இறுதி நாளின் மீதும் எந்த அளவுக்கு முழுமையான நம்பிக்கை கொள்கிறார் என்றால், இறைவனை தனது கண்களால் பார்த்தது போன்று நம்புகிறார். அப்போது அந்த நம்பிக்கையின் அருளால் நல்ல செயல்களில் காணப்படும் கசப்பு மற்றும் கஷ்டங்கள் விலகி விடுகின்றன. இறைவனின் ஒவ்வொரு விதியும் ஒத்து இருப்பதால் தேனைப் போன்று உள்ளத்தில் இறங்குகிறது. அது உள்ளத்தின் எல்லா பகுதிகளையும் தனது சுவையால் நிரப்பி விடுகிறது. அது ஒவ்வொன்றும் உவமையாகவும் நற்கொடையாகவும் தென்படுகிறது. எனவே ஈமானின் சக்தியால் இறைவனைப் பார்த்து அவனது கசப்பான விதியிலிருந்து இனிப்பான தேனைப் போன்ற சுவையை அனுபவிக்கிறார். எனவே சஹீது இந்தப் பொருளின் அடிப்படையில் சஹீது என்று அழைக்கப்படுகிறார். இந்த உயர்ந்த அந்தஸ்து முழுமையான மூஃமினுக்கு அடையாளமாகும்.

மறுமை நாளை எல்லா மூஃமினும் நம்புகின்றனர். ஆனால் அதன் மீது நம்பிக்கை கொள்வது என்றால் என்ன? இறைவனுடன் இவ்வுலகில் தொடர்பை ஏற்படுத்துவதுதான் அந்த நம்பிக்கையாகும். உலவகாதிகளும் தமது நேசத்திற்குரியவர்களுக்காக பல கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்கின்றனர். இறைவன் எல்லா நேசத்திற்குரியவர்களை விடவும் அதிக நேசத்திற்குரியவனாவான். அவனுக்காக எவ்வளவு கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுள்ளது. உலகத்தின் ஆசா பாசங்கள் காலம் செல்லச் செல்ல மறைந்து விடுகின்றன. அல்லது அவை இவ்வுலகில் முடிவடைந்து விடுகின்றன. ஆனால் இறைவனுடன் அன்பு கொள்வதற்கான கனி, இவ்வுலகிலிருந்து சென்ற பின் மறுமையில் இன்னும் அதிகமாக கிடைக்கும். நல்ல செயல்களின் நற்கூலி இறைவனின் விருப்பத்தின் சொர்க்கத்தின் பால் கொண்டு செல்கிறது.

இவ்வுலகில் மனிதன் செய்கின்ற சில செயல்கள் சில நேரம் சந்தேகமின்றி கடினமாகவும் கசப்பாகவும் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு உலகவாதி பொய் சொல்லி தனது உலக வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு வழிவகை செய்து கொள்கிறான். ஆனால் ஒரு உண்மையான மூஃமின் பொய்யை ஷிர்க்கிற்கு ஒப்பாகக் கருதுவதால் பொய் பேசி பலன் அடைய முயற்சி செய்வதில்லை. சில நேரம் உண்மை இவ்வுலகில் சில கஷ்டத்திற்கும் இழப்பிற்கும் காரணமாகி விடுகிறது.

உதாரணமாக அஹ்மதிய்யத் ஒரு உண்மையாகும். இறைவனின் வாக்குறுதிக்கேற்ப தோன்றிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் இந்த உண்மை, அஹ்மதிகளை பல நாடுகளில் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக பாகிஸ்தானில் இந்த உண்மையை வெளிப்படுத்தினால் அஹ்மதிகளுக்கு தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஆனாலும் அஹ்மதிகள் ஈமானில் உறுதியுடன் நிலைத்திருக்கின்றனர். இங்கு இத்துடன் தொடர்புடைய இன்னொரு விசயத்தையும் கூறுகிறேன்.

அஹ்மதிகள் பாகிஸ்தானிலிருந்து இங்கு அடைக்கலம் தேடி வந்துள்ளனர் அல்லது வருகின்றனர். சத்தியத்தை வெளிப்படுத்தியதன் காரணமாக அவர்கள் தமது நாட்டில் இருந்து இந்த ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வந்தது. ஆனால் இங்கு வந்து பொய்யையும் தவறான சாட்சிகளையும் தமது அடைக்கலமாக ஆக்கினால் அவர்கள் செய்த எல்லா நல்ல காரியங்களும் நாசமாகி விடும். இந்த நாடுகளில் உண்மைக்கு இப்போதும் நல்ல மதிப்பு உள்ளது. உண்மையைக் கூறினால், அதாது சிலரது நிலைமைகள் மிகவும் நியாயமானதாக உள்ளது. பல வழக்குகள் உள்ளன. எதிர்ப்பும் அதிகமாக உள்ளது. ஆனால் சிலருக்கு எதுவுமே இல்லை. அவர்கள் உண்மையைக் கூறி, ஒரு தொடர்ச்சியான துன்புறுத்தல் மற்றும் சட்ட ஒழுங்கின்மை மற்றும் அஹ்மதிகளுக்கு எதிராக உள்ள சட்டங்கள் எமது வாழ்க்கையின் சுதந்திரத்தை பறித்து விட்டது. எனவே இந்த சூழ்நிலையில் நாங்கள் இனி இதை எங்களால் தாங்க முடியாது. ஒவ்வொருவருக்கும் பொறுத்துக் கொள்ளும் தரம் வெவ்வேறானதாகும். எனவே நாங்கள் ஹிஜ்ரத் செய்தோம் என்று உள்ளதை உள்ளபடி கூறுங்கள்.

இப்போதும் பாகிஸ்தானில் இலட்சக்கணக்கான அஹ்மதிகள் உள்ளனர். அவர்கள் இன்சா அல்லாஹ் அங்கேயே இருப்பார்கள். ஆனால் பொறுமையின் தரம் ஒவ்வொருவருக்கு வெவ்வேறானதாகும். எங்களால் தாங்க முடியவில்லை. எனவே நாங்கள் இங்கு வந்து விட்டோம் என்று கூறினால், இம்மக்கள் அதைப் புரிந்து கொள்கின்றனர். மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் Asylam அல்லது நீண்ட கால VISA கொடுத்து விடுகின்றனர். ஆனால் நீங்கள் பொய் கூறினால் பிறகு ஒரு பொய்யிற்காக பல பொய்கள் சொல்ல வேண்டியது வரும். இதனால் சிலரது கேஸ் கெட்டு விடுகிறது. சில கேஸ் பாஸ் ஆகி விடுகிறது என்று வைத்துக் கொண்டாலும், இதனால் அந்த மனிதர் தனது இறைவனின் கோபத்திற்கு ஆளாகி விடுகின்றார் என்பதில் சந்தேகமில்லை.

எனவே இறைவனின் விருப்பத்தை எப்போதும் நாம் நம் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும். நான் உண்மையைக் கூறுமாறு யாருக்கெல்லாம் கூறினேனோ, உண்மையின் அடிப்படையில் கேஸ் போடுமாறு கூறினேனோ அவர்கள் உண்மையைப் பேசினர். அத்துடன் அவர்கள் இறைவனது முன்னால் குனியவும் செய்தனர். இவர்களது வழக்கு சில நாட்களிலேயே பாஸ் ஆனதை நான் பார்த்துள்ளேன்.

ஒரு ஹதீஸின்படி உண்மையில் நிலைத்திருந்தவாறு உலகிற்காக ஹிஜ்ரத் செய்தவரும் சஹீதாவார். இன்னும் அவர் ஸித்தீக் ஆவார் என்றும் வந்துள்ளது. அபூதாவூதின் அறிவிப்பாகும். ஹஸரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் தன் மார்க்கத்தில் குழப்பம் ஏற்படாமல் இருக்க அதை பாதுகாக்க ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு ஹிஜ்ரத் செய்தார் என்றால் அவர் இறைவனின் பார்வையில் ஸித்தீக் ஆவார். இந்நிலையில் அவர் மரணமடைந்தால் சஹீதாவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரிடத்தும் நம்பிக்கை கொண்டவர்கள் தமது இறைவனிடத்தில் ஸித்தீக் மற்றும் சஹீதாவார். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் தமது மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்கின்றாரோ அவர் கியாமத் நாளின் போது ஈஸப்னு மர்யமுடன் சம அந்தஸ்தில் இருப்பார்.

நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். மார்க்கத்திற்காக ஹிஜ்ரத் செய்து வந்துள்ளீர்கள். எனவே எப்போதும் உணமையை நிலைநாட்டுங்கள். உங்களது ஈமானை உறுதிப்படுத்துங்கள். இறுதி நாளின் மீது ஈமானும் உறுதியும் கொள்ளுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

கேள்வி கணக்கு கேட்கப்படும் என்பது நிச்சயமான ஒன்றாகும். இறைவன் கட்டளையிட்டுள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இன்னும் இதன் விளக்கத்தை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். எனவே இரு ஒரு நிச்சயமான ஒன்றாகும் என்றிருக்கும் போது அல்லாஹ்வின் கட்டளையின்படி

வாழ்க்கையை நடத்தி சிறந்த நற்கூலியை ஏன் பெறக்கூடாது? ஏன் உலக இச்சைகளுக்காக அல்லாஹ்வின் தண்டனைக்கு மனிதன் ஆளாக வேண்டும்?

இது ஒரு தனி கருத்தாகும். எவ்வாறிருப்பினும், சுருக்கம் என்னவென்றால் மறுமை நாளை கவனத்தில் கொள்பவன் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை கொண்டவராவார். அவர் சஹீதும் ஆவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: சஹீதின் உச்சநிலை என்னவென்றால், துன்பம், கவலை மற்றும் சோதனைகளின் காலகட்டத்தில் ஈமானின் சக்தி, நல்லொழுக்கத் திறன் மற்றும் உறுதி மனப்பான்மை ஆகியவை அசாத்தியமான நிலையில் இருப்பதன் காரணமாக அல்லாஹ்வின் அடையாளமாகி விடுகிறது.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: ஈமான் எந்த அளவு உறுதியாகிறதோ அதே அளவு செயல்களிலும் சக்தி கிடைக்கிறது. இந்த ஈமானின் சக்தி முழுமையாக வளர்ந்து விட்டால் அந்த மூஃமின் சஹீதின் பதவியில் இருக்கிறார். ஏனெனில் அவருடைய வழியில் எந்த தங்குதடைகளும் இருப்பதில்லை. அவர் தனது நேசத்திற்குரிய உயிரையும் அர்ப்பணிப்பதற்குத் தயங்க மாட்டார். எனவே சஹீதின் பதவியை அடைவது என்பது உயிரை அர்ப்பணிப்பது மட்டுமல்ல. மாறாக ஈமானின் உயர் தரத்தை அடைவதும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதும் ஆகும். ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நம்ப வேண்டும்.

சுருக்கமாக நான் இதையும் கூறி விடுகிறேன். அல்லாஹ் ஒரு மூஃமினுக்கு என்ன அளவுகோலை கூறுகிறான்? அல்லாஹ் யூமினூன பில் கைப் என்று கூறுகின்றான். அதாவது மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். கடந்த கால நபிமார்கள் மீதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதும் முழுமையாக ஈமான் கொள்ளுங்கள். இக்காலத்தின் இமாம் மற்றும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள். அல்லாஹ் வபில் ஆகிரத்திஹும் யூகினூன் என்று கூறுகிறான். அவர்கள் பிற்காலத்தில் வருகின்ற வாக்களிக்கப்பட்ட விசயங்கள் மீதும் நம்பிக்கை கொள்கின்றனர். இறுதிக் காலத்தில் எல்லாவற்றையும் விட மேலான வாக்களிக்கப்பட்ட ஒன்று, மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றமாகும். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். வபில் ஆகிரத்திஹும் யூகினூன் என்ற வசனத்தின் இந்தப் பகுதியில் என் மீது ஈமான் கொள்வதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.

பிறகு ஈமானை வலுப்படுத்துவதற்காக அல்லாஹ் கூறுகிறான். இறைவனிடம் எல்லாவற்றையும் விட அதிகமாக அன்பும் நேசமும் கொள்வது ஒரு மூஃமினின் தனித்தன்மையாகும். இதுவும் நம்மில் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இறைவனின் நேசம் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமாக இருக்க வேண்டும். இந்த நேசம் இல்லையென்றால் ஈமான் பலவீனமடைந்து விடும். பிறகு அல்லாஹ்வின் மீது ஈமான், வானவர்கள் மீது ஈமான், அவனது வேத நூல்களின் மீது ஈமான், அவனது தூதர்கள் மீது ஈமான் இவ்வனைத்தின் மீதும் ஈமான் கொள்ளுதல் கட்டாயக் கடமையாகும். இதன் தரமும் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும்.

பிறகு அல்லாஹ் ஈமான் கொள்வதன் தரத்தை இவ்வாறு கூறுகிறான்: ஈமான் கொள்பவர்களுக்கு முன்னால் இறைவனின் பெயரைக் கூறும் போது அவர்களின் உள்ளங்கள் இறையச்சத்தாலும் பயத்தாலும் நடுங்கி விடுகின்றன. பிறகு கூறுகிறான்: இறை வழியில் ஜிஹாது செய்பவர்கள் மூஃமின்களாவர் என்று கூறுகிறான். ஜிஹாத் பலவகைப்படுகிறது. ஒன்று, வாளால் செய்யப்படும் ஜிஹாது ஆகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையினால் முடிந்து விட்டது. இனி மார்க்கத்தின் போர்கள் ஏதும் கிடையாது. இவ்வாறான ஜிஹாது ஏதும் இனி இல்லை. ஆனால் ஓர் அஹ்மதிக்கு கடமையான ஜிஹாத், ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் செய்ய வேண்டிய ஜிஹாது, ஈமானை வலுப்படுத்தவும் சஹாதத்தின் உயர் பதவியை அடைவதற்கும் செய்ய வேண்டிய ஜிஹாது தப்லீகின் ஜிஹாதாகும். எனவே உள்ளங்களை

தூய்மைப்படுத்துவதற்காக செய்கின்ற ஜிஹாதுடன் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைக்கும் ஜிஹாதைச் செய்வதும் ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும். இந்த ஜிஹாதை எல்லா நாட்டிலும் எல்லா இடத்திலும் இருந்து செய்ய முடியும். இங்கு வருகின்ற ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது கடமையாகும். இந்த ஜிஹாதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு பங்குபெற வேண்டும்.

அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக ஜிஹாது செய்வதும் ஈமானின் ஒரு பகுதியாகும். ஈமான் கொண்டவர்களை அல்லாஹ்வின் கட்டளைகளின்பால் அழைத்தால் ஸமிஃனா வஅதஃனா என்று கூறுவர். இதுவும் ஈமானின் ஓர் அடையாளமாகும். ஒரு காதில் வாங்கி இன்னொரு காதில் விடுவதில்லை. மாறாக கேட்டு அதன்படி செயல்பட வேண்டும். இதுவே ஓர் உண்மையான மூஃமினின் சிறப்பு அம்சமாக இருக்க வேண்டும். பல்வேறு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. குத்பாக்களை நீங்கள் கேட்கிறீர்கள். இதைக் கேட்டு விட்டீர்கள் என்ற அளவில் மட்டுமல்லாது அதன்படி செயல்படவும் வேண்டும். கேட்டேன்; கட்டுப்பட்டேன் என்ற அளவில் இருக்க வேண்டும். கட்டுப்படுதலின் முன்மாதிரியை எடுத்துக் காட்டும் செயலாக இருக்க வேண்டும்.

இவ்வாறான முயற்சிகள் இருந்தால் உண்மையான மூஃமினாக இருக்கலாம். இதனால் சஹாதத் பதவியை வழங்கும் தரத்தை அடையலாம். சஹாதத்தின் உயர் பதவியை நமக்கு பெற்றுத்தரும் இலக்குகளை நோக்கி முன்னேறுவோம். இதில் இன்ன கட்டளைஇருக்கிறது. இதற்கு இன்ன விளக்கம் அல்லது விரிவுரை உள்ளது என்று விவாதம் செய்வது மூஃமினுக்கு அழகல்ல. அல்லாஹ்வின் கட்டளைகளை செவியேற்றதும் அவர்களின் உள்ளங்கள் நடுங்கி விடுகின்றன. இதுவும் ஓர் உண்மையான மூஃமினின் பணியாகும். அல்லாஹ்வின் முன்னால் அவனது கட்டளைகளின்படி செயல்பட சக்தியை வேண்டியவாறு அவர்கள் ஸஜ்தாவில் விழுகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு கொண்டு அதில் வளர்ச்சி பெறுபவர் ஒரு உண்மையான மூஃமின் ஆவார். எனவே இக்காலகட்டத்தில் ஒரு மூஃமினிடம் இருக்க வேண்டிய சிறப்பம்சங்கள் இவையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் நிபந்தனைகளில் கூறியுள்ளார்கள். இக்காலத்தில் ஹஸரத் நபி (ஸல்) அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இறைவன் அனுப்பியுள்ளான். எனவே அவர்களோடும் எல்லா உலக நேசத்தை விடவும் அதிக நேசமும் உயரிய தொடர்பும் கொள்வது அவசியமாகும். நான் கூறியது போன்று இந்த சிறப்புகள் யாவும் ஒரு மூஃமினிடம் இருக்க வேண்டும். இந்த சிறப்புகள் இருந்தால் அவர் இயற்கை மரணம் அடைந்தாலும், அவர் சஹாதத்தின் உயர் பதவியைப் பெற்று விடுகிறார். எனவே நாம் இந்த உயர் பதவியை அடைவதற்கு இறைவனின் மீது முழுமையான நம்பிக்கையை உருவாக்க வேண்டும். மறுமை நாளின் மீது முழுமையான நம்பிக்கையை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும் இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நம்புங்கள். இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கு எல்லா கடினங்களையும் சகித்துக் கொள்ளும் சக்தி கிடைக்க அவனிடம் துஆ செய்யுங்கள். அடையாளமாக அமையக்கூடிய ஈமானின் திறனைப் பெறுவதற்கு இறைவனிடம் துஆ செய்யுங்கள். எந்த உலக ஆசையும் இச்சையும் நமது ஈமானில் ஆட்டத்தை ஏற்படுத்த முடியாத அளவில் உறுதியான ஈமானைக் கடைபிடியுங்கள். நல்ல செயல்களைச் செய்வதற்கு எல்லா வித அச்சத்திலிருந்தும் உள்ளத்தையும் மூளையையும் தூய்மையாக வைத்திருங்கள். எவ்வித வெளிவேசமும் இன்றி எல்லா வித நன்மைகளையும் செய்யக்கூடியவர்களாக திகழ வேண்டும். ஒவ்வொரு நன்மையும் நமது இயல்பின் அங்கமாக மாறிவிட வேண்டும்.

உறுதிப்பாடு மற்றும் அமைதி ஆகியவற்றின் சக்தியைப் பெறுவதற்கு இறைவன் முன்னால் குனிபவர்களாக நாம் ஆக வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்ற இறை வணக்கத்தின் உயர் தரங்களைத் தேட முயற்சி செய்யுங்கள். ஆக இந்த உயர் தரங்களைப் பெறுவதற்கு ஒரு மூஃமின் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும். நாம் சஹாதத்திற்காக ஏன் துஆ செய்ய வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பக்கூடிய உண்மையான மூஃமின் இதற்குப் பிறகு யாரும் இருக்கிறாரா?

இந்த உண்மையான சஹாதத்தைப் பெறுவதற்கு மூஃமின் துஆ செய்வது அவசியமாகும். இதனால் அவர் உண்மையான மூஃமின் ஆக முடியும். ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்களின் மூலமாக நான் சுருக்கமாக சிலவறறைக் கூறியுள்ளேன். இவை நம்மில் ஒவ்வொருவரும் பெறுவதற்கும், வாழ்வில் கடைபிடித்து நடக்க விரும்ப வேண்டியவையும் ஆகும். இந்த தகுதியை நாம் அடைந்து விட்டால், எதிரிகளின் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள் மூலம் நாம் உயிரைத் தியாகம் செய்வது தவிர, உலகின் எந்தவொரு அமைதியான நாட்டில் வாழ்ந்தும் கூட சஹாதத்தின் உயர் பதவியை நம்மால் அடைய முடியும். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக!

ஹம்பர்க்கில் வைத்து நான் கடந்த ஜும்ஆவின் போது கூறினேன். அன்றைய தினம் ஒரு சஹாதத்தின் செய்தி வந்தது. அப்போது அவரைப் பற்றிய குறிப்புகள் இல்லாததால் ஜனாஸா தொழ முடியவில்லை. இன்று இன்சா அல்லாஹ் ஜும்ஆவிற்குப் பிறகு இந்த சஹீதின் ஜனாஸாவை தொழ வைப்பேன்.

இவரது பெயர் மதிப்பிற்குரிய மக்சூத் அஹ்மது சாஹிப் ஆகும். இவர் மதிப்பிற்குரிய நவாப் கான் சாஹிபின் மகன் ஆவார். டிசம்பர் 7, 2012 அன்று கொவய்ட்டாவில் இவரது சஹாதத் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது தந்தையார் நவாப் கான் சாஹிபின் கொள்ளுப்பாட்டி மாக்கோ சாஹிபா என்று அறியப்பட்ட பாக்பரி சாஹிபாவின் மூலமாக இவரது குடும்பத்திற்கு அஹ்மதிய்யத் கிடைத்தது. இவர் காதியானுக்குப் பக்கத்தில் நங்கலில் வசித்து வந்தார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்தார். பாகிஸ்தான் உருவான பிறகு இந்த குடும்பம் ஹிஜ்ரத் செய்து சாயிவாலுக்கு சென்றது. பிறகு 1965-ல் கொவய்ட்டாவிற்கு குடிபெயர்ந்தது. மக்சூத் சாஹிப் கொவய்ட்டாவில் பிறந்தார். இவரது வயது 31 ஆகும். இவர் நடுத்தர கல்வி கற்றவர். தம் தந்தையாருடன் கான்ட்ராக்ட் வேலை பார்த்து வந்தார். இவ்வாண்டு நவம்பரில் இவரது சகோததர் மதிப்பிற்குரிய மன்சூர் அஹ்மது சாஹிபும் சஹீதாக்கப்பட்டார். இவரது சஹாதத்திற்கு முன் மக்சூத் சாஹிப் கட்டுமானப் பணிகளின் கான்ட்ராக்ட் வேலை மட்டும் செய்து வந்தார். அத்துடன் சில நேரம் தம் சகோதரரின் ஹார்டுவேர் கடையில் பணிபுரிந்து வந்தார். சகோதரரின் சஹாதத்திற்குப் பிறகு இவர் முழு நேரம் கடையின் பணியை தொடங்கினார்கள்.

இவர் சஹீதான சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது டிசம்பர் 7 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு மக்சூத் சாஹிப் தம் வேலைக்காரருடன் சேட்டிலைட் டவுனில் உள்ள ஹார்டுவேர் கடைக்குச் சென்றார். வேலைக்காரரைக் கடையில் அமர்த்தி விட்டு தம் இரண்டு குழந்தைகளை சேட்டிலைட் டவுனில் இருந்த பள்ளிக்கூடத்தில் விடுவதற்காக சென்றார்கள். பள்ளியில் குழந்தைகளை விட்டு திரும்பி வரும் போது மோட்டார் சைக்கிளில் இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் வந்து இவர் மீது துப்பாக்கியால் சுட்டனர். சஹீது மர்ஹூமிற்கு 5 தோட்டாக்கள் பட்டன. அதில் 4 தலையிலும் ஒரு தோட்டா தோள்பட்டையிலும் பட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். ஆனால் காயங்களைத் தாங்க முடியாமல் வழியிலேயே சஹாதத் பதவியை அடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

கடந்த மாதம் இவரது அண்ணன் சஹீதாக்கப்பட்டார் என்று நான் முன்னதாகக் கூறினேன். 2009 -ல் இவர் கடத்தப்பட்டார். 12 நாட்களுக்குப் பிறகு மிகப்பெரிய ஈட்டுத்தொகை கொடுத்து இவர் மீட்கப்பட்டார். மர்ஹூம் கித்மத்தே கல்க் பணிகளில் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார். மெடிக்கல் கேம்ப் நடத்தும் போதெல்லாம் அதற்காக அவர் தமது வாகனத்தை வழங்குவார். அவரே அதை ஓட்டிக் கொண்டு உடன் செல்வார். அவ்வாறே தஃவத்தே இலல்லாஹ் நிகழ்ச்சிகளிலும் தமது வாகனத்தை வழங்குவார். உடன் செல்வார். கொய்ட்டாவிற்கு வரக்கூடிய முரப்பிகளை நன்கு கவனித்து வந்தார். அவர்களுக்கு தொண்டு செய்து மகிழ்ச்சியை உணர்வார். செக்யூரிட்டி பணியை மிகவும் ஆர்வத்தோடு செய்து வந்தார். குறிப்பாக ஜும்ஆவின் நாளில் பணி புரிவார்.

சேட்டிலைட் டவுனில் கொய்ட்டாவைச் சேர்ந்த சதர் சாஹிப் கூறுகிறார்: சஹீது மர்ஹூம் மிகவும் விருந்து உபசரிக்கும் பண்பு கொண்டவர். குறைவாக பேசுபவர். நல்லொழுக்கம் உடையவர். பரிவு காட்டும் இயல்பு கொண்டவர். யாரிடமும் எப்போதும் கோபப்படுபவர் அல்ல. யாருக்கும் கோபப்படுவதற்கு வாய்ப்பு கொடுப்பதும்

இல்லை. சில நேரம் எதிரிகள் கடுமையான தொனியில் பேசினால் அதை சிரித்து சமாளித்து விடுவார். அந்தக் கடுமையை உணரவில்லை என்பது அல்ல. மாறாக அவர் வீட்டிற்கு வந்து இன்னின்ன எதிரிகள் இன்று இவ்வாறு கூறினார்கள். சில சமயம் அழுது விடுவார்கள்.

சதர் சாஹிப் கூறுகிறார்கள்: சஹாதத்திற்கு 3 நாட்களுக்கு முன்பு எனக்கு போன் செய்தார். இதுவரை எனது சந்தாவை ஏன் வாங்கவில்லை? என்று கூறி அன்றே தமது எல்லா சந்தாக்களையும் முழுமையாகச் செலுத்தினார்கள். மனைவி மக்களுடன் அன்பும் நேசமும் அளவுகடந்து வைத்திருந்தார். மனைவி மக்களிடம் ஒருபோதும் உரத்த குரலில் பேசியதில்லை. தமது பெற்றோருடனும் தம் மனைவியின் பெற்றோரையும் மிகவும் மதித்து வந்தார். அவர்களை எல்லா வகையிலும் நன்கு கவனித்து வந்தார். இவரது தந்தை நவாப் கான் சாஹிப் மற்றும் இவரது மனைவி சாயிதா மக்சூத் சாஹிபா மற்றும் மகன் மஸ்ரூர் அஹ்மது இவனுக்கு வயது 9 ஆகிறது. மகள் மரியம் மக்சூத் வயது 7 ஆகிறது. இது தவிர இவருக்கு இரண்டு சகோதரிகளும் உள்ளனர். இவரது தாயார் முன்னதாக வஃபாத் ஆகி விட்டார்கள். இவரது தந்தை இரண்டாவது திருமணம் செய்த பின் இவரை வளர்த்த தாயார் இருக்கிறார்கள்.

சேட்டிலைட் டவுனின் முஅல்லிம் சாஹிப் இவரைப் பற்றி எழுதுகிறார்: இவர் மிகவும் சிறந்த இயல்பு கொண்டவர். விருந்தோம்பல் செய்வது இவரது வீட்டின் ஒரு மகத்தான சிறப்பாகும். முரப்பிகள் மற்றும் முஅல்லிம்களை உள்ளத்தால் மதிப்பவர் ஆவார். மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்வார். இவரது வீடு தொழுகைக்குரிய சென்டர் ஆக இருந்தது. அதை எப்போதும் நடத்துவதற்கு முயற்சி செய்வார். இவரது வீட்டில் தொழுகை நடந்து வந்தது. அத்துடன் வக்ஃபே நவ் வகுப்புகளும் நடந்து வந்தன. பிள்ளைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்தி வந்தார்கள்.

கொய்ட்டாவின் சூழ்நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்பதால் இங்கிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டும் என்று எண்ணினார். இதற்காக முஅல்லிமிடம் ஆலோசனை செய்து எனக்கும் கடிதம் எழுத இருந்தார். ஆனால் அல்லாஹ்வின் தக்தீர் இதுவாக இருந்தது. அதற்கு முன் அல்லாஹ் அவருக்கு சஹாதத்திற்கான உயர் பதவியை வழங்கினான். இவரது தந்தைக்கு இரண்டு மகன்கள் மட்டுமே இருந்தனர். இருவரும் அல்லாஹ்வின் வழியில் சஹீதாகி விட்டனர். இதனால் இவரது தந்தையார் வானத்தை நோக்கி இறைவா இருவரையும் நீ எடுத்துக் கொண்டாய். இனி இந்த அநியாயக்காரர்களை நீயே பழிவாங்குவாயாக! என்று மட்டும் கூறினார்.

அல்லாஹ் மர்ஹூமின் பதவிகளை உயரத்துவானாக! இந்த சஹாதத் இவர்களின் விதியில் எழுதப்பட்டிருந்தது. அல்லாஹ் இவரது பிள்ளைகளுக்கு துணையாகவும் பாதுகாவலனாகவும் இருப்பானாக! அவர்களை தன் பாதுகாவலில் வைப்பானாக! மனைவி மக்களுக்கும் பெற்றோருக்கும் பொறுமை, தைரியம் மற்றும் உறுதிப்பாட்டை வழங்குவானாக! எதிரிகளை அவர்களின் தீய முடிவிற்கு இலக்காக்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HAZRATH KHALIFATUL MASIH V
at Baitus Sabuh Mosque, Frankfurt Germany.
on **14.12.2012**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456